செலவு கிட்டத்தட்ட ஒரு லட்சத்து அறுபதுஆயிரம் வரையிலும் 5 உயர்நிலைப் பள்ளிகளில் உந்து வண்டி பழுது பார்க்கும் பயிற்சியளிக்க 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வரையில் ஆகிறது. ஆகவே, எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் அதைக் கொண்டுவர வேண்டுமானால் அதிகமான செலவாகும். ஆகவே படிப்படியாக இருக்கிற வாய்ப்பு வசதிகளைப் பொறுத்து இந்த முறைகளைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது.

மாண்புமிகு அமைச்சர் திரு ஆ. கு. சுப்பையா: இந்தத் திட்டம் அவர்கள் 11 உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டுவரப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். 11 மாவட்டங்களில் எந்த எந்த பள்ளிகளில் என்ற விவரத்தைச் சொல்லமுடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எம்.சி.டி. உயர்நிலைப் பள்ளி, புரசைவாக்கம், சென்னை கிறிததுவ கல்லூரி உயர்நிலைப்பள்ளி சேத்துப்பட்டு, அரசு கழக உயர்நிலைப்பள்ளி, குளித்தலை, அரசு கழக உயர்நிலைப்பள்ளி ஆரணி, அரசு கழக உயர்நிலைப்பள்ளி அறந்தாங்கி, அரசு கழக உயர்நிலைப்பள்ளி ராசிபுரம், அரசு கழக உயர்நிலைப்பள்ளி தர்மபுரி, கே. ஜே. என் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம், புனித மேரி உயர்நிலைப்பள்ளி, மதுரை, உயர்நிலைப்பள்ளி, திருச்சி, இளையான்குடி உயர் நிலைப்பள்ளி, இளையான்குடி ஆகியவையாகும்.

திரு எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே இப்போது, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதில் தஞ்சாவூர் விடப்பட்டிருக் கிறது. குறிப்பாக நகரப்புறங்களிலேதான் இப்படிப்பட்ட தொழிற் பயிற்சியை ஆரம்பிக்கிறார்கள், கிராமப்புறங்களிலேயும் அவற்றை ஏற் படுத்தினால்தான் அங்கே வேலையில்லாத திண்டாட்டத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள் இந்தத் தொழில்களைச் செய்து பிழைப்பார்கள். ஆகவே கிராமப்புறங்களிலேயும் இதை விஸ்தரிப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அறந்தாங்கி தஞ்சை மாவட்டத்திலே இருந்தது. இப்போது புதுக் கோட்டையிலே உள்ளது. ஆகவே தஞ்சை மாவட்டத்திலே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வேளாண்மையைப் பொறுத்த வரையில் பயிற்சி பட்டுக்கோட்டை உயர்நிலைப்பள்யில் கொடுக்கப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பயிற்சிக்கு தஞ்சை ஏற்ற இடம் என்பதாலே வேறு சில இடங்களிலே அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் கோர்ஸ் ஆரம்பிப்ப தற்கு ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

அரசினர் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

*298 வினா—திரு கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்விச்-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

1975 மார்ச் 13]

(அ) தஞ்சாவூர் அரசினர் மகளிர் கல்லூரிக்கு மாணவர் விடுதிக் கட்டடம் ஒன்று புதிதாகக் கட்டுகின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் உத்தேசச் செலவு என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ரூ. 4.50 லட்சம்.

திரு கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் தொடங்க இருப்பதாகச் சொன்னார்கள், எப்போது தொடங்க இருக்கிறார்கள் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக மானியக் குழு ஆதற்கு 3 லட்சம் தரும். அது மத்திய அரசிலிருந்து வந்தபிறகு அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

செல்லியம்மன் ஓடைத் திட்டம்.

*299 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், மணக்குடையான் ஊராட்சி, இருங்களாகுறிச்சி கிராமம் செல்லியம்மன் ஓடைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன?

(உ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) இத் திட்டத்திற்கான மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களின் பரிசீலனையில் உள்ளது.

(இ) ரூ. 2.05 லட்சம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை. ஏனெனறால், இத்திட்டத்திற்கான மதிப்பீடு இன்னும் அரசின் பரிசீலனைக்கு வரவில்லை.

திரு. செ. சதாசிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலே ஆற்றுப்பாசனம் இல்லை என்று முன்பே குறிப்பிட்டிருந்தேன். இதை உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மதிப்பீடு அரசுக்கு வந்தவுடன் அதைப்பற்றி ஆணை பிறப்பிக்கப்படும்.